தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-11-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஊரக வேளாண் அனுபவ பயிற்சியின் கருத்துக்காட்சி நடைபெற்றது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஊரக வேளாண் அனுபவ பயிற்சியின் கருத்துக்காட்சி நவம்பர் 5, 2015 அன்று நடைபெற்றது. இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கு. ரா. ஆனந்த குமார் அவர்கள் கருத்துக்காட்சியை தொடங்கி வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடினார். இப்பல்கலைக்கழக வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் ச. மகிமைராஜா அவர்கள் கலந்து கொண்டு ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சியின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துரைத்தார். அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | செயல்பாடுகள் | நாட்கள் |
|---|---|---|
| 1. | கிராம அனுபவப் பயிற்சி | 60 |
| 2. | வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பயிற்சி | 10 |
| 3. | அரசு சாரா நிறுவனத்தில் பயிற்சி | 10 |
| 4. | வேளாண் சார்ந்த தொழிற்சாலையில் பயிற்சி | 10 |
| | மொத்தம் | 90 |

ஊரக வேளாண் அனுபவ பயிற்சியில் மொத்தம் 96 இளநிலை வேளாண்மை பட்டப்படிப்பு மாணவர்கள் பங்கேற்றனர். அதில் 63 மாணவிகள் மற்றும் 33 மாணவர்கள் ஆகும். மாணவர்களை பத்து குழுக்களாக பிரித்து (ஒரு குழுவுக்கு 9 அல்லது 11 பேர்) கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள பத்து கிராமங்களை தேர்ந்தெடுத்து அங்கு பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு குழுவுக்கும் தனிப்பட்ட விஞ்ஞானி தெரிவுசெய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டனர்.

| வ.எண். | மாவட்டம் | மாணவர்களின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவி | |
| 1. | கோவை | 14 | 18 | 32 |
| 2. | திருப்பூர் | 10 | 18 | 28 |
| 3. | ஈரோடு | 9 | 27 | 36 |

| | மொத்தம் | 33 | 63 | 96 |
|---|---|---|---|---|

***கிராமங்களின் விபரம்***

| வ.எண். | மாவட்டம் | வட்டம் |
|---|---|---|
| 1. | கோவை | 1. பொள்ளாச்சி (தெற்கு) |
| | | 2. ஆனைமலை |
| | | 3. அன்னூர் |
| 2. | திருப்பூர் | 4. தாராபுரம் |
| | | 5. உடுமலைபேட்டை |
| | | 6. மடத்துக்குளம் |
| 3. | ஈரோடு | 7. பவானிசாகர் |
| | | 8. கோபிசெட்டிப்பாளையம் |
| | | 9. தூக்கநாயக்கன்பாளையம் |
| | | 10. சத்தியமங்கலம் |

ஊரக அனுபவ பயிற்சி 60 நாட்கள் நடைபெற்றன. இதில் ஒவ்வொரு மாணவருக்கும் அந்தந்த கிராமத்தில் முன்னோடி விவசாயிகளுடன் சேர்ந்து அவர்களின் வழிகாட்டுதலுடன் அனுபவ பயிற்சி வழங்கப்பட்டன. அப்பயிற்சியில் கிராம சூழ்நிலை, பயிர் வகைகள், பண்ணை அமைப்பு, மண்வகைகள், நீர்நிலை, சாகுபடி தொழில்நுட்பங்கள், வேளாண்மையில் மேற்கொள்ளும் பிரச்சனைகள், விளைபொருட்கள் விற்பனை முறை மற்றும் பதப்படுத்துதல் போன்றவை பற்றி அறிந்துக்கொண்டனர். மேலும், சிறு, குறு, பெரு மற்றும் பெண் விவசாயிகளுடன் கலந்துரையாடி அவர்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் பண்ணை தொழில்நுணுக்கங்கள் பற்றியும் தெரிந்துகொண்டனர்.

அடுத்த 10 நாட்கள் பயிற்சி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதன் பயனாக, அலுவலக அமைப்பு, வேளாண் இடுபொருள் மானியத் திட்டங்கள், அரசு திட்ட செயல்பாடுகள், பயிற்சிகள் மற்றும் அட்மா திட்ட செயல்பாடுகள் பற்றியும் தெரிந்துக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து, 10 நாட்கள் அரசு சாரா நிறுவனங்களுடன் (NGO) சேர்ந்து பயிற்சி கொடுக்கப்பட்டன. அதில் அவர்களுடைய செயல் திட்டங்கள், பயிற்சி நடத்தும் முறை, குழு அமைத்தல் மற்றும் கிராம வளர்ச்சியில் அவர்களின் ஈடுபாடு பற்றியும் தெரிந்துகொண்டனர்.

அடுத்த 10 நாட்கள் வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளில் பயிற்சி எடுத்துக்கொண்டனர். இதில் உற்பத்தி முறை, விற்பனை முறை, மேலாண்மை நுணுக்கங்கள் மற்றும் சுயதொழில் தொடங்க தேவையான அனைத்து தொழில் நுணுக்கங்களையும் கற்றுக்கொண்டனர்.

ஊரக கிராம அனுபவ பயிற்சியின் முடிவில் மாணவர்களின் கருத்துக்காட்சி நடைபெற்றது. இதில் ஒவ்வொரு குழுவுக்கும் தனி இடம் ஒதுக்கப்பட்டு அவர்கள் கற்றுக்கொண்டவைகளை கருத்துக்காட்சியில் வைத்து விளக்கினர். அவர்களின் செயல்களை விஞ்ஞான குழு அமைக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து, இரண்டு நாட்கள் ஊரக அனுபவ பயிற்சி கருத்தரங்கு நடைபெறும். அதில் மாணவர்கள் கற்றுக்கொண்ட அனுபவத்தை பற்றி விளக்குவார்கள். அவற்றையும் விஞ்ஞான குழு அமைத்து மதிப்பீடு செய்யப்படும்.

ஊரக கிராம அனுபவ பயிற்சியின் மூலம் மாணவர்களுக்கு பண்ணை மற்றும் விரிவாக்க செயல்பாடுகள் பற்றிய நேரிடை அனுபவம் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகள் மற்றும் வேளாண் அலுவலர்களுடன் கலந்துரையாடும் திறன், மற்றும் பகுப்பாய்வு திறன் போன்ற அனுபவங்கள் கிடைக்க மாணவர்களுக்கு இத்திட்டம் வழிகாட்டியாய் விளங்குகிறது.

முனைவர் மு. அசோகன், பேராசிரியர் மற்றும் தலைவர் மற்றும் முனைவர் ச. ஸ்ரீவர புத்தி புவனேஸ்வரி, உதவி பேராசிரியை, வேளாண் விரிவாக்கம் மற்றும் ஊரக சமூகவியல் துறை, விஞ்ஞானிகள், பாடத்திட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கருத்துக்காட்சியை பார்வையிட்டு மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்